**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

முன்னிலை :- திரு.M. ரவிச்சந்திரன், பிஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பட்டுக்கோட்டை

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு2055-ஸ்ரீசோபகிருது வருடம் தைத் திங்கள் 29 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 2/ 2023**

**இன்**

**அசல் வழக்கு எண் 89/2019**

இந்திரஜித் ... **மனுதாரர் / வாதி**

/ எதிர்/

1. புகழேந்தி(இறந்தார்)
2. திருமேகன்,அவருடைய அதிகாரம் பெற்ற
   முகவர் தமிழரசி
3. தமிழரசி ... **எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்**

இம்மனு 30.11.2023-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. லெனின் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. ஜி. செங்கொடி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17-ன்படி மனுவில் கண்டவாறு பிராதை திருத்தம் செய்ய மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்: -**

மனுதாரர்/வாதியால் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல்

M RAVICHANDRAN Digitally signed by M RAVICHANDRAN Date: 2024.02.14 12:21:43 +0530

செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்சியாடி வருகிறார்கள் என்றும், பின்னர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் வாதிக்கு உரிமையும் அனுபோகமும் இல்லை என மறுத்து எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளதால் அது குறித்து மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரையில் விளம்புகை மற்றும் நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் அசல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் 1ம் பிரதிவாதி கடந்த 24.05.2018 ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரர் /2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து ஒரு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக்கொடுக்க 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எவ்வித உரிமையும் இன்றி 1ம் பிரதிவாதியால், 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ள இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி இல்லா நிலை உடையது என விளம்புகை பரிகாரம் பொறுத்து வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டியதுஅவசியம் என்றும், இதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என்றும், எனவே மனுதாரர் மனுவில் கண்டவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என தெரிவித்துள்ளார்.

**3. 3ம்எதிர்மனுதாரர்/ /3ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம்எதிர்மனுதாரர்/ /2ம்பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் :-**

மனு அபிடவிட்டில் கண்ட சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பாகவும் அப்பட்டமான பொய்யுமாக இருக்கின்றது என்றும், வாதி மனுவில் கூறியுள்ளதுபோல் இறந்த 1ம் எதிர்வாதி அவருக்கு பாத்தியம் இல்லாத சொத்துக்களை இந்த 2ம் எதிர்வாதிக்கு செட்டில்மெண்ட் ஏற்படுத்தியிருப்பதாக கூறியுள்ளது தவறு என்றும், உண்மையில் இறந்த 1ம் எதிர்வாதி புலஎண். 32/6ல் 4 செண்டு நிலத்தை துரைமாணிக்கம் என்பவரிடமிருந்து 13.12.1985 ல் கிரயம் பெற்றது முதல் பட்டா பெயர்

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2024.02.14 12:21:56 +0530

மாற்றம் செய்து அது முதல் 1ம் எதிர்வாதி அவரது பெயர் பட்டா பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வந்தும், அதேபோல் புல எண் 32/7 ல் 18 செண்டு நிலத்தில் 12 குழி நிலத்தை வீ. கருப்பையன் வகையறாவிடமிருந்து 03.09.1992 ல் 1ம் எதிர்வாதி கிரயம் பெற்று அனுபவித்து வந்துள்ளார் என்றும், அதன்பிறகு வாதி மற்றும் 1ம் எதிர்வாதியின் தாயாரால் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்களில் புல எண் 32/6 ல் விஸ்தீரணம் 0.0731 ச.மீ. மற்றும் புல எண் 32/5 ல் 0.0385 ச.மீ. ஆகிய சொத்துக்களை வாதி, 1ம் எதிர்வாதி மற்றும் இறந்த சண்முகவேல் ஆகியோர் ஒப்புக்கொண்டவாறும் நெருங்கிய உறவினர்கள் சொல்லிவிட்டபடியும் சொத்தை 1ம் எதிர்வாதி அனுபவித்து வந்துள்ளார் என்றும், அதன்படியே 1ம் எதிர்வாதி பட்டா பெயர் மாற்றம் பெற்று 1ம் எதிர்வாதி பெயரில் பட்டாவும் ஏற்பட்டுள்ளது என்றும், அதன்பிறகு 1ம் எதிர்வாதி அவரது மகனான 2ம் எதிர்வாதிக்கு புல எண் 32/5, நகர புல எண் 11/7 விஸ்தீரணம் 0.0385 ச.மீ. மற்றும் 32/6, நகர புல எண் 11/8 விஸ்தீரணம் 00.0731 ச.மீ. நிலத்தையும் அதில் உள்ள வீட்டையும் ஒரு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றும, அந்த ஆவணமும் அமுலுக்கு வந்து அதன்படி 2ம் எதிர்வாதியும் சொத்துக்களை அனுபவித்து வருகின்றார் என்றும், வாதி ஆரம்பத்தில் இறந்த 1ம் எதிர்வாதிக்கு எதிராக வெறும் நிரந்தர உறுத்துக் கட்டளைக்கு மட்டுமே வழக்கு தொடர்ந்திருந்தபோதிலும், இறந்த 1ம் எதிர்வாதி அவரது மகனான 2ம் எதிர்வாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றியும், அந்த ஆவணத்தின் நகலையும் பிராதுடன் தாக்கல் செய்திருந்தார் என்றும், அப்பொழுதே வாதி மேற்படி ஆவணம் பற்றிய பரிகாரம் கோர வாய்ப்பிருந்தும் வாதி கோரவில்லை என்றும், தற்பொழுது வேண்டும் என்றே காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்.

4. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2024.02.14 12:22:10 +0530

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
'' மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?
என்பதேயாகும்''.

**6. தீர்வு: -**

இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில், தாவா சொத்தை பொறுத்து, மனுதாரர்/வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கட்சியாடி வந்து வழக்கு விசாரணைக்காக வாய்தா எழுந்த நிலையில் மனுதாரர் / வாதிக்கு பாத்தியமான தாவா புல எண்ணில் கண்ட சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமை மூலமும் இல்லை என மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதால் அது குறித்து வழக்குரையில் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கில் திருத்தம் செய்யகோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்னர், 1ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளதால் அது குறித்து வழக்குரையில் மனுவில் கண்டவாறு திருத்தம் செய்யக்கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**7.** மனுதாரர்/வாதி அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து கட்சியாடி வந்து, மனுதாரர்/ வாதி, அவரது பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள காரணங்களின் அடிப்படையிலும், மனுதாரர்/வாதிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என விளம்புகை பரிகாரம் கோரி ஏற்கனவே அசல் வழக்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாலும், 1ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொருத்து தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளதாலும், தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து கண்டறிய அசல் வழக்கில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என மனுதாரர்/வாதி தெரிவித்துள்ளார்.

M RAVICHANDRAN Digitally signed by M RAVICHANDRAN
Date: 2024.02.14 12:22:22 +0530

**8.** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தாலும், வாதிக்கு உரிமை உள்ள தாவா சொத்தை 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதி பெயரில் கடந்த 24.05.2018 ம் தேதியில் எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி இல்லா நிலை உடையது என்றும், அது வாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என விளம்புகை பரிகாரத்தை வழக்குரையில் சேர்க்காமல் விடுபட்டு போய்விட்டது என்றும் , அது குறித்து வழக்குரையை திருத்தம் செய்வது அவசியம் என்றும், வழக்குரையை மனுவில் கண்டவாறு திருத்தம் செய்து வழக்கு விசாரணை மேற்கொண்டால் தான் அசல் வழக்கின் தீர்விற்கு உகந்ததாக இருக்கும் என்றும், இதனால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், அசல் வழக்கானது விசாரணை தொடங்கும் நிலையில் உள்ளதால் மனுதாரரின் இம்மனுவை நீதியின் நலன்கருதி ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN Digitally signed by M RAVICHANDRAN
Date: 2024.02.14 12:22:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

<u>**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u>:-

இல்லை.

M RAVICHANDRAN Digitally signed by M RAVICHANDRAN
Date: 2024.02.14 12:22:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.